*(Chapter XXII Code of Criminal Procedure.)*

*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC.404/2023***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-3 (LW-2)***

*Name / Father's Name:* ***திரு.சாமிநாதன் த/பெ. காவேரி***

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **14.06.2024.**

துவக்க நேரம் 02.24

**அரசு தரப்பு வழக்கறிஞர் இல்லை என்றாலும் போலீஸ் பொறுப்பதிகாரியான திரு.தமிழரசு ஆஜராகியுள்ளார். அவர் முன்னிலையில் சாட்சி அடையாளம் காட்டப்பட்டு விசாரணை**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது ஒதியத்துாரில் குடியிருந்து, அழுக்குமாவு வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 1 1/2 வருடங்களுக்கு முன்பாக, தேதி, மாதம் நினைவில்லை, ஒருநாள் மாலை 04.00-05.00 மணியளவில் ஒதியத்துார் கேட் அருகே நான் இருந்தபோது, ஒரு டாடா ஏஸ் வாகனமும், அதன் பின்னால் ஒரு இருசக்கர வாகனமும் சென்றுகொண்டிருந்தது.

2) அப்போது டாடா ஏஸ் வாகனம் திடீரென பிரேக் போட்டதால் பின்னால் வந்த இருசக்கர வாகனமும் திடீரென பிரேக் போட்டு அந்த இருசக்கர வாகனத்தில் பயணம் செய்த இரண்டுபேரும் கீழே விழுந்துவிட்டார்கள். அதில் இருசக்கர வாகனத்தின் பின்னால் அமர்ந்து சென்றவருக்கு பலத்த அடிபட்டுவிட்டது.

3) நானும், அருகில் இருந்தவர்களும் சென்று பார்த்தபோது அவர் பேச்சு, மூச்சு இன்றி கிடந்தார். பின்னர் 108 ஆம்புலன்சுக்கு போன் செய்து வரவழைத்து

அடிபட்டவர்களை அனுப்பிவைத்தேன். போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார், என்னிடம் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த பின்பு, சத்தம் கேட்டு தான் நான் சம்பவயிடம் சென்று பார்த்தேன் என்றால் சரிதான்.

முடிவு நேரம் 02.33

ஒம்/–S.அருண்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்.

(Chapter XXII Code of Criminal Procedure.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.

*Case No.:* **CC.404/2023**

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-4 (LW-3)***

*Name / Father's Name:* ***திரு.தங்கராஜ் த/பெ. பொன்மலை***

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **14.06.2024.**

துவக்க நேரம் 02.34

**அரசு தரப்பு வழக்கறிஞர் இல்லை என்றாலும் போலீஸ் பொறுப்பதிகாரியான திரு.தமிழரசன் ஆஜராகியுள்ளார். அவர் முன்னிலையில் சாட்சி அடையாளம் காட்டப்பட்டு விசாரணை**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது ஒதியத்தூரில் குடியிருந்து வருகிறேன். கடந்த 1 1/2 வருடங்களுக்கு முன்பாக, தேதி, மாதம் நினைவில்லை, ஒருநாள் மாலை 04.00-05.00 மணியளவில் ஒதியத்தூர் கேட் அருகே நானும், சாமிநாதனும் நின்று பேசிக்கொண்டிருந்தபோது, ஒரு டாடா ஏஸ் வாகனமும், அதன் பின்னால் ஒரு இருசக்கர வாகனமும் சென்றுகொண்டிருந்தது.

2) அப்போது டாடா ஏஸ் வாகனம் திடீரென பிரேக் போட்டதால் பின்னால் வந்த இருசக்கர வாகனமும் திடீரென பிரேக் போட்டு அந்த இருசக்கர வாகனத்தில் பயணம் செய்த இரண்டுபேரும் கீழே விழுந்துவிட்டார்கள். அதில் இருசக்கர வாகனத்தின் பின்னால் அமர்ந்து சென்றவருக்கு பலத்த அடிபட்டுவிட்டது.

3) நானும், அருகில் இருந்தவர்களும் சென்று பார்த்தபோது அவர் பேச்சு, மூச்சு இன்றி கிடந்தார். பின்னர் 108 ஆம்புலன்சுக்கு போன் செய்து வரவழைத்து

அடிபட்டவர்களை அனுப்பிவைத்தேன். போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார், என்னிடம் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த பின்பு, சத்தம் கேட்டு தான் நான் சம்பவயிடம் சென்று பார்த்தேன் என்றால் சரிதான்.

முடிவு நேரம் 02.42

ஒம்/–S.அருண்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்.